**வரையறுக்கப்பட்ட கல்லோயா பெருந்தோட்ட (தனியார்) கம்பனி -2021/2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட கல்லோயா பெருந்தோட்ட (தனியார்) கம்பனியின் 2022 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து 2022 மார்ச் 31 இல் உள்ளவாறான கம்பனியின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச்

சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தாயரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்பு 2.5(அ) இன் பிரகாரம், சொத்துக்களின் எதிர்பார்க்கப்படும் பயன்பாட்டின் அடிப்படையில் ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் (PPE) மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலத்தை முகாமைத்துவம் மதிப்பாய்வு செய்கிறது. எனினும், மொத்த சொத்துக்களில் 12.5 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஏறத்தாழ ரூபா 228.81 மில்லியன் கிரயமான முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட சொத்துக்கள் இலங்கை கணக்கீட்டு நியமம் (எல்கேஏஎஸ்) 16 – ஆதனம், பொறி மற்றும் | கம்பனியின் மதிப்பாய்வு முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட சொத்துக்கள் உட்பட ஒவ்வொரு சொத்தின் பயன்தரு ஆயுட்காலத்தை மதிப்பிடுகிறது. ஏதேனும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் கண்டறியப்பட்டுள்ளன; அது நிதிநிலைக்கு சீராக்கப்படும். மேலும் அதன் பிரகாரம் எல்கேஏஎஸ் 08 இன் கீழ் வெளிப்படுத்தப்படும். எனினும், இந்த முழுமையாக பெறுமானத்தேய்விடப்படும் சொத்துக்களை பழுதுபார்ப்பதற்கும் பராமரிப்பதற்கும் கம்பனி கணிசமான தொகையை வருடாந்தம் செலவிட்டதுடன் விரிவான | எல்கேஏஎஸ் 16 மற்றும் எல்கேஏஎஸ் 08 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளிற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| உபகரணங்களின் 51 ஆம் பந்தியில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அந்த சொத்துக்களின் பயன்தரு பொருளாதார ஆயுட்காலத்தை மீள்மதிப்பீடு செய்து, எல்கேஏஎஸ் 8 - கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் பிழைகள் ஆகியவற்றின் பிரகாரம் மதிப்பீட்டு பிழையை திருத்தம் செய்து நிதிக்கூற்றுக்களில் சரியான கொண்டுசெல்லும் பெறுமதியை காட்டாமல் கம்பனி தொடர்ந்து பயன்படுத்தி வருகிறது. | வருமானக் கூற்றிற்கு அக் கிரயம் அறவிடப்பட்டது. | |

### 1.5.2 கணக்காய்விற்கான ஆவணச்சான்றின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மூலதனப் பங்களிப்பிற்கான உறுதிப்படுத்தல் ஆவணங்கள் மற்றும் கூறப்பட்ட மூலதனம் மற்றும் ரூபா 1,379,190,795 தொகையான சம்பளக் கொடுப்பனவு தொடர்பான ஊழியர்களின் சம்பளத் தாள்கள் என்பன அந்தக் கணக்கு மீதிகளின் சரியானதன்மை மற்றும் பௌதீக இருக்கும் தன்மையை உறுதிப்படுத்தி சரிபார்ப்பதற்காக கணக்காய்விற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | ஊழியர்களின் சம்பளம் முகாமைத்துவ உடன்படிக்கையின் கீழ் முகாமைத்துவ கம்பனியால் தீர்மானிக்கப்படுகிறது. | அந்தக் கணக்கு மீதிகளின் சரியானதன்மை மற்றும் பௌதீக இருக்கும் தன்மையை உறுதிப்படுத்தி சரிபார்ப்பதற்கு கணக்காய்விற்கு உறுதிப்படுத்தல் ஆவணங்கள் வழங்கப்பட வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40 ஆம் பிரிவு | | |
| கம்பனியின் கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக கம்பனியின் பணிப்பாளர் சபையினால் முறையாக நியமிக்கப்பட்ட ஒரு உள்ளக கணக்காய்வாளர் இருக்க வேண்டிய போதிலும் கம்பனிக்கு உள்ளக கணக்காய்வாளர் பதவி மற்றும் தனியான உள்ளக கணக்காய்வு பிரிவை | இது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டத்தில் (AMC) கலந்துரையாடப்பட்டது. அதன் பிரகாரம் புதினப்பத்திரிகை விளம்பரத்தை பிரசுரிப்பதன் மூலம் உள்ளக கணக்காய்வு பணிகளை மேற்கொள்வதற்கு புகழ்பெற்ற கணக்காய்வு நிறுவனங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டன. ஆனால், தகுதியான தரப்பினர் பதிலளித்திருக்கவில்லை. | தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரகாரம் கம்பனியின் பணிப்பாளர் சபைக்கு பொறுப்பான ஒரு உள்ளக கணக்காய்வுப் பிரிவு நிறுவப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிறுவாமல் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் பங்குதாரர் கம்பனி ஒன்றின் அதாவது லங்கா ஓரிக்ஸ் லீசிங் கம்பனியின் உளளகக் கணக்காய்வு பதவியணியினரால் மேற்கொள்ளப்பட்டதுடன் மீளாய்வாண்டில் அவர்களுக்கு ரூபா 1,840,048 தொகை செலுத்தப்பட்டது. | | |
| (ஆ) | அரசாங்க பெறுகை வழிகாட்டல்கள் 4.2.1 | | |
| | பிரதான பெறுகைத் திட்டம் குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகளுக்குத் தயாரிக்கப்பட வேண்டியதுடன் ஆறு மாதங்களுக்கு மிகாமல் ஒரு காலத்திற்குள் தொடர்ந்து புதுப்பிக்கப்பட வேண்டும், அதன் பின்னர் அடுத்த ஆண்டிற்கான விரிவான வருடாந்த பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். எனினும், கம்பனி பிரதான பெறுகைத் திட்டத்தை தயாரித்திருக்கவில்லை. | வரையறுக்கப்பட்ட கல்லோயா பெருந்தோட்ட (தனியார்) கம்பனியானது இலங்கை அரசாங்கத்திற்கும் கூட்டமைப்புக்கும் (பிறவுண் & கம்பனி பிஎல்சீ மற்றும் எல்ஓஎல்சீ ஹோல்டிங்ஸ் பிஎல்சீ) இடையிலான ஒரு கூட்டு முயற்சியாகும், இதில் 51 சதவீத உரிமைத்துவம் இலங்கை அரசாங்கத்திடமும் 49 சதவீத உரிமைத்துவம் கூட்டமைப்பிடமும் உள்ளது. எனினும், முகாமைத்துவம் கூட்டமைப்பால் கையாளப்படுகிறது, மேலும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் வருடாந்தம் ஒரு எதிர்கூறப்பட்ட பாதீடு தயாரிக்கப்படுகிறது. பெறுகை பாதீட்டின் அடிப்படையில் பாதீடு தயாரிக்கப்பட்டது. | அரசாங்க பெறுகை வழிகாட்டல்களுடன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | கூட்டிணைந்த ஆளுகை தொடர்பான வழிகாட்டல்களுக்கான 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் அரச உடமையாக்கப்பட்ட நிறுவனங்களிற்கான (SOEs) செயற்பாட்டுக் கையேடு | | |
| (i) | 5.1 ஆம் பந்தி | | |
| | இடைக்கால மற்றும் இறுதி வரிகள்/ பங்கிலாபங்களை பிரகடனப்படுத்தாமல் கம்பனியின் ஊழியர்களுக்கு மிகையூதியம் அல்லது இலாப அடிப்படையிலான ஊக்குவிப்புக்களின் கொடுப்பனவுகள் | முகாமைத்துவ உடன்படிக்கையின் 7.4.2 மற்றும் 7.4.3 ஆம் இலக்க குறிப்புக்களின் பிரகாரம் அனைத்து GOPL ஊழியர்களையும் பணிக்கமர்த்துதல், பணிநீக்கம் செய்தல், பதவி உயர்வு, மேற்பார்வை செய்தல், நேரடி மற்றும் பயிற்சி ஆகியவற்றிற்கும் அவர்களின் | கூட்டிணைந்த ஆளுகை தொடர்பான வழிகாட்டல்கள் மற்றும் அரச உடமையாக்கப்பட்ட நிறுவனங்களிற்கான (SOEs) |

| | | |
|---|---|---|
| மேற்கொள்ளப்படக்கூடாத போதிலும், கம்பனி 2021/2022 நிதியாண்டிற்கான இலாபத்தின் அடிப்படையில் இடைக்கால மற்றும் இறுதி வரிகள்/ பங்கிலாபங்கள் பிரகடனப்படுத்தப்படாமல் 2021/2022 ஆம் ஆண்டில் அதன் ஊழியர்களுக்கு மிகையூதியமாக ரூபா 59,441,160 தொகையை செலுத்தியிருந்தது. | இழப்பீடு, ஊக்குவிப்பு படிகள், சம்பளம், ஊதியம் மற்றும் வெகுமதிக் கொள்கைகளை நிர்ணயம் செய்வதற்கும் முகாமைத்துவம் ஏற்பாடு செய்துள்ளது. மேற்படி உட்பிரிவுகளின் அடிப்படையில் Ex Gratia கொடுப்பனவு விடுவிக்கப்பட்டது. பணிப்பாளர் சபை பங்கிலாபங்களை பிரகடனப்படுத்துவதற்கு ஒப்புதல் அளித்தது, ஆனால் கம்பனியின் திவால்நிலை காரணமாக, பங்கலாபங்கள் இறுதி செய்யப்படவில்லை. | செயற்பாட்டுக் கையேட்டின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். |

(ii) 5.3 ஆம் பந்தி

| | | |
|---|---|---|
| 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனி சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சோதனையில் திருப்தி அடைந்து, ஒருங்கிணைந்த நிதி/ பங்குதாரர்களுக்கு வரிக்குப் பின்னரான இலாபத்தில் ஆகக்குறைந்தது 30 சதவீதம் பகிர்ந்தளிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், கம்பனி இந்த அறிக்கைத் திகதி வரையிலும் ஒருங்கிணைந்த நிதி/ பங்குதாரர்களுக்கு பங்கிலாபம் எதனையும் செலுத்தியிருக்கவில்லை. | கம்பனியின் திவால் நிலை காரணமாக பங்கிலாபம் இறுதி செய்யப்படவில்லை. | கூட்டிணைந்த ஆளுகை தொடர்பான வழிகாட்டல்கள் மற்றும் அரச உடமையாக்கப்பட்ட நிறுவனங்களிற்கான (SOEs) செயற்பாட்டுக் கையேட்டின் ஏற்பாடுகளுடன் இணங்குதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

(அ) மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 2,005,792,206 இலாபமொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 749,367,009 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது பிரதானமாக கம்பனியின் தேறிய வருமானம் ரூபா 1,256,425,197 ஆல் அதிகரித்தமை காரணமாக இலாபத்தில் ரூபா 1,256,425,197 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது.

(ஆ) கம்பனியின் நிர்வாகச் செலவினங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் ரூபா 288,670,928 அல்லது 29.6 சதவீதத்தால் அதிகரித்திருந்தன, அதேநேரம் நிதிச் செலவினமானது முன்னைய ஆண்டில் ரூபா 1,764,592,788 இலிருந்து ரூபா 2,118,837,177 வரை 20 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது. இதன் விளைவாக, கம்பனியின் மொத்தலாபம் முன்னைய ஆண்டில் ரூபா 3,440,998,164 இலிருந்து மீளாய்வாண்டில் ரூபா 4,677,882,467 வரை ரூபா 1,236,884,303 ஆல் அல்லது 26.4 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் மீளாய்வாண்டில் ரூபா 2,005,792,206 தேறியலாபம் காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சூரியசக்தி மின் உற்பத்தி மற்றும் கார்பன் டையோக்சைடு (CODS) உற்பத்தி மூலம் முறையே ரூபா 25,314,575 மற்றும் ரூபா 9,126,000 வருமானத்தை ஈட்டுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் எந்த வருமானமும் உருவாக்கப்படவில்லை. | 2021 நவம்பர் மாதம் முதல் தேசிய மின்சார கட்டமைப்பிற்கு சூரியசக்தி மின்சாரத்தை ஏற்றுமதி செய்வதற்கு எதிர்பார்த்தோம். எனினும், செயற்திட்டம் தொடங்கப்பட்டதும் பல சம்பவங்கள் இடம்பெற்றன, இதனால் செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டது.<br><br>அவற்றில், கொவிட்-19 தொற்றுநோய் பரவல் முழு செயற்திட்ட நடவடிக்கைகளையும் கடுமையாகப் பாதித்ததுடன் சில சந்தர்ப்பங்களில் செயற்திட்டக் குழுவை அணிதிரட்ட வேண்டியிருந்தது. மேலும், சரக்குகள் தாமதமடைவதை இது பாதித்தது. மேலும், நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால், பல அரசாங்க கட்டுப்பாடுகள் LC திறப்பு மற்றும் LC/TT கொடுப்பனவுகளை கடுமையாக பாதித்தன. இதன் விளைவாக பெரும்பாலான இறக்குமதி பொருட்கள் உரிய நேரத்தில் தளத்திற்கு வரவில்லை. நாட்டில் எரிபொருள் கிடைனவு பற்றாக்குறை காரணமாக பதவியணியினர் மற்றும் பொருட்களை சரியான நேரத்தில் கொண்டு செல்வது சவாலாக இருந்ததுடன் நிகழ்ச்சித்திட்ட அமுல்ப்படுத்தலில் தாமதங்களை ஏற்படுத்தியது. எனவே, இச் செயற்திட்டம் தாமதமானதுடன் எதிர்வுகூறப்பட்டவாறு சூரியசக்தி மின்சாரத்தை தேசிய மின்சார கட்டமைப்பிற்கு ஏற்றுமதி செய்ய முடியவில்லை. | செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை மற்றும் நாட்டின் நிதி நெருக்கடி காரணமாக, CO2 செயற்திட்ட அமலப்படுத்தலை கடுமையாக பாதித்தது. தற்போது நாங்கள் செயற்திட்டத்தின் நிர்மாணப் பணிகளைத் தொடங்கியுள்ளோம். | |
| (ஆ) கம்பனி நிதியாண்டில் ரூபா 258,069,752 தொகையை செலவிட்டு 2,000 கிலோவாற்ஸ் திறன் கொண்ட 3739 பனல்கள் கொண்ட சூரியசக்தி போட்டோவோல்டாயிக் மேற்கூரை (Photovoltaic Roof Top) முறைமையை கொள்வனவு செய்திருந்தது. இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. 2021 ஏப்ரல் 01 ஆம் திகதிய பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் இந்த ஒப்பந்தம் பெர்ஸ்ட் எனேர்ஜி (பிறைவேட்) லிமிட்டட்டிற்கு ரூபா 258,069,752 ஒப்பந்த பெறுமதிக்கு வழங்கப்பட்டதுடன் 2021 ஏப்ரல் 05 இல் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. எனினும், இந்த ஒப்பந்த வேலைகளுக்கு கம்பனி ரூபா 328,892,283 மொத்த தொகையை செலுத்தியிருந்ததால் கம்பனி 2022 மார்ச் 31 வரை ஒப்பந்ததாரருக்கு ரூபா 70,822,531 தொகையை மேலதிகமாக செலுத்தியிருந்தமை அவதானிக்கப்பட்டது. அரசாங்க பெறுகை வழிகாட்டல்களின் 2.14.1 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் உண்மையான பெறுமதியுடன் உடன்படிக்கையொன்றை அங்கீகரிக்கும் அதிகாரம் கொண்ட பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரால் இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்படவில்லை. | 2,000kWp இற்கான உடன்படிக்கை 2021 ஏப்ரல் 05 இல் ரூபா 258,069,752.00 கிரயத்தில் கைச்சாத்திடப்பட்டு செயற்திட்ட நடவடிக்கைகள் தொடங்கப்பட்டது. எனினும், கொவிட் 19 தொற்றுநோய் மற்றும் நாட்டின் பொருளாதார நெருக்கடியால், சூரியசக்தி செயற்திட்டங்களுக்கான கிரயம் கடுமையாக அதிகரித்துள்ளது. இலங்கை மின்சார சபையிடமிருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், தேசிய மின்சார கட்டமைப்பிற்கு மேலதிக மின்சாரத்தை வழங்குவதற்கான சாத்தியம் காணப்பட்டது. எனவே, நிதி சாத்தியக்கூறுகளைக் கருத்தில் கொண்டு, அதே கிரயத்தில் (ஒரு kWp இற்கு ரூபா 111,741.37 படி) தற்போதுள்ள மின்சக்தி செயற்திட்டத்தை மேலும் 1,750kWp ஆல் விரிவாக்குவதற்கு முடிவு செய்யப்பட்டது. விரிவாக்க சூரியசக்தி செயற்திட்டத்திற்கான கிரயம் ரூபா 195,547,397 ஆகும். சூரியசக்தி செயற்திட்டத்தின் மொத்த கிரயமானது சிவில் மற்றும் செயற்திட்டம் தொடர்பான பணிகளை தவிர்த்து ரூபா 453,617,149.50 ஆகும். கம்பனி 2021-22 நிதியாண்டில் ரூபா 317,532,005 வழங்குநர் கிரயம் (உடன்படிக்கையின் பிரகாரம் முற்பணம் மற்றும் முன்னேற்ற கொடுப்பனவாக 70%) மற்றும் ரூபா 11,360,278 சிவில் மற்றும் செயற்திட்டம் தொடர்பான கிரயம் என ரூபா 328,892,283 கூட்டுமொத்த தொகையை செலுத்தியிருந்தது. GOPL இற்கு சொந்த பெறுகை வழிகாட்டல் உள்ளது, எனவே பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் கையொப்பம் தேவைப்படவில்லை. | மேலதிகக் கொடுப்பனவை அறவிடுவதற்கும் அரசாங்க பெறுகை வழிகாட்டல்களை பின்பற்றுவதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கடந்த 07 ஆண்டுகளில் சீனி பிரித்தெடுப்பின் சதவீதம் படிப்படியாகக் குறைந்து வருவதையும், 2014/2015 இல் பதிவு செய்யப்பட்ட 8.1 சதவீதமான அதிகபட்ச பெறுமதி மீளாய்வாண்டில் 6.4 சதவீதமாகக் குறைவடைந்துள்ளது. இந்நிலைமையை வெற்றிகரமாக நிவர்த்தி செய்வதற்கான காரணங்களை விசாரைண செய்து தீர்வு நடவடிக்கைகளை கம்பனி மேற்கொள்ள்ளத் தவறியிருந்தது. | தற்போது, அனைத்து உள்ளுர் சீனி தொழிற்சாலைகளும் சீனி மீட்பு மற்றும் POL % கரும்பு ஆகியவற்றில் பெரும் சவாலை எதிர்கொள்கின்றன. கடந்த சில ஆண்டுகளில் சீனித் துறையில் குறைந்த மீட்பு நிலை மற்றும் குறைந்த கரும்பு POL % பதிவு செய்யப்பட்டது. கரும்பு ஆராய்ச்சி நிறுவனமும் (SRI) இந்தப் பிரச்சனைக்கான மூல காரணத்தைக் கண்டறியும் பணியில் ஈடுபட்டுள்ளது. ஒரு கம்பனியாக, நாங்கள் கூட, தொழிற்சாலையில் கரும்பு மற்றும் சீனி மீட்டெடுப்பின் குறைந்த POL % ஐ சமாளிப்பதற்கு எமது அதிகபட்ச முயற்சியை மேற்கொள்கிறோம். சுற்றாடல் மாற்றங்கள் மற்றும் முகாமைத்துவ நடைமுறைகளுக்காக POL % கரும்பு மற்றும் சீனி மீட்பு மிகவும் எளிதில் பாதிக்கப்படுகிறது.<br><br>எனினும், தற்போது தொழிற்சாலை புதிய அரைக்கும் சைக்கிள், புதிய கொதிகலன் மற்றும் மின் விசையாழி மற்றும் தேவையான செயன்முறை வீட்டு உபகரணங்களைச் சேர்ப்பதன் மூலம் மேம்படுத்தப்பட உள்ளது. இணையாக, கரும்பு பயிர்ச்செய்கை சமீபத்திய தொழில்நுட்பத்தை சேர்ப்பதன் மூலம் கிடைமட்டமாகவும் செங்குத்தாகவும் வளருகின்றது. இந்த அபிவிருத்திகள் மூலம், தொழிற்சாலை அதிக கரும்புகளை நசுக்க முடிவதுடன் எதிர்காலத்தில் சர்க்கரை மீட்பை அதிகரிக்க முடியும். வயலில் கரும்புகளின் POL% ஐ அதிகரிப்பதற்கு நடுகை மற்றும் நல்ல வேளாண்மை நடைமுறைகள் பற்றிய புதிய தொழில்நுட்பங்களை நாங்கள் அறிமுகப்படுத்துகிறோம். தற்போது நாங்கள் எமது சீனி மீட்டெடுப்பை மேம்படுத்துவதற்கு கரும்பு திட்டமிடலைப் பயிற்சி செய்கிறோம். மேலும், தொழிற்சாலை முற்றத்தில் கரும்புகள் தேங்குவதைக் குறைப்பதற்கு நாங்கள் ஏற்கனவே முற்ற நடைமுறைகளை மாற்றியுள்ளோம்.<br><br>மேற்படி காரணங்களால், கரும்பில் அதிக POL% மற்றும் தொழிற்சாலையில் அதிக மீட்பை எதிர்பார்க்கிறோம். | POL சதவீதம் குறைவதற்கான காரணிகள் கண்டறியப்பட வேண்டும், மேலும் இந்த சூழ்நிலையை நிவர்த்தி செய்வதற்கான காரணங்களை விசாரணை செய்து தீர்வு நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது அவசியமாகும். |
| (ஈ) | கம்பனியின் 10 ஆண்டு தரவுகளின் பிரகாரம், சீனியை உற்பத்தி செய்வதற்காக தொழிற்சாலையின் | தற்போது, அனைத்து உள்ளுர் சீனி தொழிற்சாலைகளும் சீனி மீட்பு மற்றும் POL % கரும்பு ஆகியவற்றில் பெரும் சவாலை எதிர்கொள்கின்றன. கடந்த சில ஆண்டுகளில் சீனித் துறையில் குறைந்த | வருடாந்த கரும்பு உற்பத்தி குறைவடைவதற்கான காரணிகள் கண்டறியப்பட |

| | | | |
|---|---|---|---|
| | இயந்திரங்களில் ஊட்டப்பட்ட கரும்புத் தண்டுகளில் உள்ள சீனியின் அளவு மாற்றத்தின் போது படிப்படியாகக் குறைவடைந்துள்ளது. அதன் பிரகாரம், 2012/2013 ஆம் ஆண்டில் 10.9 சதவீதமாக இருந்த எண்ணிக்கை மீளாய்வாண்டளவில் 6.4 சதவீதம் வரை குறைவடைந்திருந்த போதிலும், அந்த சதவீதத்தை மேம்படுத்துவதற்கு முகாமைத்துவம் உரிய நடவடிக்கையை எடுத்திருக்கவில்லை. | மீட்பு நிலை மற்றும் குறைந்த கரும்பு POL % பதிவு செய்யப்பட்டது. கரும்பு ஆராய்ச்சி நிறுவனமும் (SRI) இந்தப் பிரச்சனைக்கான மூல காரணத்தைக் கண்டறியும் பணியில் ஈடுபட்டுள்ளது. ஒரு கம்பனியாக, நாங்கள் கூட, தொழிற்சாலையில் கரும்பு மற்றும் சீனி மீட்டெடுப்பின் குறைந்த POL % ஐ சமாளிப்பதற்கு எமது அதிகபட்ச முயற்சியை மேற்கொள்கிறோம். சுற்றாடல் மாற்றங்கள் மற்றும் முகாமைத்துவ நடைமுறைகளுக்காக POL % கரும்பு மற்றும் சீனி மீட்பு மிகவும் எளிதில் பாதிக்கப்படுகிறது.<br><br>எனினும், தற்போது தொழிற்சாலை புதிய அரைக்கும் சைக்கிள், புதிய கொதிகலன் மற்றும் மின் விசையாழி மற்றும் தேவையான செயன்முறை வீட்டு உபகரணங்களைச் சேர்ப்பதன் மூலம் மேம்படுத்தப்பட உள்ளது. இணையாக, கரும்பு பயிர்ச்செய்கை சமீபத்திய தொழில்நுட்பத்தை சேர்ப்பதன் மூலம் கிடைமட்டமாகவும் செங்குத்தாகவும் வளருகின்றது. இந்த அபிவிருத்திகள் மூலம், தொழிற்சாலை அதிக கரும்புகளை நசுக்க முடிவதுடன் எதிர்காலத்தில் சர்க்கரை மீட்பை அதிகரிக்க முடியும். வயலில் கரும்புகளின் POL% ஐ அதிகரிப்பதற்கு நடுகை மற்றும் நல்ல வேளாண்மை நடைமுறைகள் பற்றிய புதிய தொழில்நுட்பங்களை நாங்கள் அறிமுகப்படுத்துகிறோம். தற்போது நாங்கள் எமது சீனி மீட்டெடுப்பை மேம்படுத்துவதற்கு கரும்பு திட்டமிடலைப் பயிற்சி செய்கிறோம். மேலும், தொழிற்சாலை முற்றத்தில் கரும்புகள் தேங்குவதைக் குறைப்பதற்கு நாங்கள் ஏற்கனவே முற்ற நடைமுறைகளை மாற்றியுள்ளோம்.<br><br>மேற்படி காரணங்களால், கரும்பில் அதிக POL% மற்றும் தொழிற்சாலையில் அதிக மீட்பை எதிர்பார்க்கிறோம். | வேண்டும். மேலும் இந்த நிலைமையை நிவர்த்தி செய்வதற்கு காரணங்களை விசாரணை செய்து தீர்வு நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது அவசியமாகும். |
| (உ) | இரசாயன உரங்களைக் குறைப்பதற்கான அரசாங்கக் கொள்கைக்கு இணங்க, கம்பனி வபருடாந்தம் 7000 மெற்றிக் தொண் உயிர் உரத்தை உற்பத்தி செய்து பொது மற்றும் தனியார் கொள்வனவாளர்களுக்கு விற்பனை செய்வதற்கு எதிர்பார்க்கிறது. 2017/2018 | 7,000 மெற்றிக் தொண் உரம் தயாரிக்கும் ஆகக்கூடிய திறன் இந்த முற்றத்தில் உள்ளது ஆனால், 5,759 மெற்றிக் தொண் உரம் உற்பத்தி செய்வதற்கு இலக்கிட்டுள்ளோம். சாதகமற்ற தட்பவெப்ப நிலை மற்றும் வீட்டுக் கூரை கிடைக்காதமை, கொவிட் 19 தொற்றுநோய் நிலை மற்றும் நாட்டின் நிதி நெருக்கடி போன்ற காரணங்களால், இந்த நிதியாண்டில் 4,300 மெற்றிக் தொண் உரம் | வருடாந்த உயிர் - உர உற்பத்தி குறைவடைவதற்கான காரணிகள் கண்டறியப்பட வேண்டும் மேலும் உற்பத்தி இலக்குகளை அடைந்துகொள்வதற்கு காரணங்களை விசாரணை செய்து |

| | | | |
|---|---|---|---|
| | ஆம் ஆண்டில் 2,625,200 கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்ட உர முற்றம் 2021/2022 ஆம் ஆண்டில் 4300 மெற்றிக் தொண் உரத்தை மாத்திரமே உற்பத்தி செய்துள்ளது. அதன் பிரகாரம், உற்பத்தி இலக்குகளை அடைந்துகொள்ள முடியாததால், கம்பனி உர முற்றத்தை முழுமையாகப் பயன்படுத்தியிருக்கவில்லை. | உற்பத்தி செய்ய முடிந்தது. தற்போது நாட்டிலேயே அதிக உரம் உற்பத்தி செய்யும் நாடு நாங்கள்தான். | தீர்வு நடவடிக்கைகளை எடுப்பது அவசியமாகும். |
| (ஊ) | கம்பனி ஒரு நாளைக்கு 10,000 கிலோகிராம் கார்பன் டைஆக்சைடை ($CO_2$) உற்பத்தி செய்து மேலதிக வருமானத்தை பெற்றுக்கொள்வதற்கு சந்தைப்படுத்துவதற்கு இலக்கிட்டுள்ளது. அதன் பிரகாரம், $CO_2$ உற்பத்தி செயற்திட்டம் 2018 இல் தொடங்கப்பட்டு 6-9 மாதங்களுக்குள் ரூபா 250 மில்லியன் செலவிடப்பட்டு பூர்த்தி செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எனினும், இந்த செயற்திட்டம் 2022 நவம்பர் 30 வரையிலும் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை மற்றும் நாட்டின் நிதி நெருக்கடி காரணமாக, $CO_2$ செயற்திட்ட அமல்ப்படுத்தல் கடுமையாக பாதிக்கப்பட்டது. தற்போது நாங்கள் செயற்திட்டத்தின் நிர்மாணப் பணிகளைத் தொடங்கியுள்ளோம். | செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | 2020/2021 மற்றும் 2021/2022 ஆம் ஆண்டுகளில் 1 கிலோ சீனியை உற்பத்தி செய்வதற்கான மொத்த உற்பத்தி கிரயம் (கடன் பெறுதல் கிரயம் உட்பட) முறையே ரூபா 216.60 மற்றும் ரூபா 180.85 ஆகும். எனினும், சீனியின் விற்பனை விலையை நிர்ணயம் செய்வதற்காக, கம்பனியின் இலாபத்தை அதிகரிப்பதற்கு போட்டி திறந்த சந்தைகளில் இருந்து விலைகளை கோருவதற்கு பதிலாக பதிவுசெய்யப்பட்ட வரையறுக்கப்பட்ட வழங்குநர்களிடமிருந்து மாத்திரமே கேள்விகள் கோரப்படுகின்றன. இந்த சூழ்நிலையில், கம்பனியின் | கம்பனியில் ஆரோக்கியமான காசுப்பாய்ச்சலை பேணுவதற்கு சீனி விற்பனை மிகவும் முக்கியமானதாகும். ஒவ்வொரு நிதியாண்டின் தொடக்கத்திலும், சீனி விற்பனை வணிகத்திற்காக பதிவு செய்வதற்கு வாடிக்கையாளர்களுக்கு கம்பனி அழைப்பு விடுக்கிறது. விற்பனையின் போது பதிவுசெய்யப்பட்ட அனைத்து வாடிக்கையாளர்களிடமிருந்தும் மொத்த விற்பனைக்கான கேள்வியை விற்பனை பிரிவு கோரியது. வாங்கும் சக்தியைப் பொறுத்து இந்த விற்பனைக்கு கூறுவிலை சமர்ப்பித்த சில கொள்வனவாளர்கள் உள்ளனர். தற்போது எங்களிடம் 60 பதிவு செய்யப்பட்ட வாடிக்கையாளர்கள் உள்ளனர், ஆனால் 5 முதல் 10 வாடிக்கையாளர்கள் மாத்திரமே கேள்விக்கு பதிலளிக்கின்றனர். | தற்போதைய சந்தை விலையை எட்டுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

பழுப்பு சீனியின் தற்போதைய விற்பனை விலை கிலோகிராம் ஒன்றிற்கு ரூபா 280 முதல் ரூபா 300 வரையான வீச்சில் உள்ளது. ஆனால், நுகர்வோர் சந்தையில் ஒரு கிலோ பழுப்பு சீனியின் சில்லறை விலை ரூபா 360 முதல் ரூபா 378 வரையான வீச்சில் உள்ளது. இதன் விளைவாக, சில நிறுவனங்களிடமிருந்து மாத்திரமே வரையறுக்கப்பட்ட கேள்வி விலைகளை கோருவதன் மூலம் கம்பனி குறிப்பிடத்தக்க அளவு வருமானத்தை இழக்கிறது.

- செயற்பாட்டிற்கு அதிக பணத் தேவை காரணமாக, கம்பனி வாராந்த அடிப்படையில் விற்பனையை அமுல்ப்படுத்த வேண்டியிருந்தது (வாரமொன்றிற்கு 1000 மெற்றிக் தொண் சீனி). கம்பனி மொத்த விற்பனையை மாத்திரமே மேற்கொள்கிறதுடன் (லங்கா சுகர், எதிமலே போன்ற கம்பனி) சில்லறை சந்தையைத் தொட முடியாது. எனவே, சில்லறை சந்தை விலைகள் நம் கட்டுப்பாட்டிற்கு அப்பால் உள்ளன.